Judicial Form No.60

**CALENDAR AND JUDGMENT**

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Re-port of com-plaint | Remand or surrender of accused | Release on bail | Commence ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| **06.06.2019** | **06.06.2019** | **06.06.2019** | **11.06.2019** | **02.09.2024** | **27.01.2026** | **05.03.2026** |
| C.S.D. 20.08.20 | Explanation of Delay and Remarks:NIL | | | | | |
| C.S.F.D 25.7.22 | | | | | | |
| D.Cogni.26.7.22 | | | | | | |
| A.P.D. 07.12.22 | | | | | | |

**Judgment in CC 50/2021 on the file of the Judicial Magistrate of Tenkasi.**

**Complainant: The Sub Inspector of Police, Sendamaram P.S in Cr.No.194/2019**

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Sivakumar | 24 | Velrajan |

| Caste or Religion | Calling | Residence | STATION |
|---|---|---|---|
| Hindu | Labourer | Andarkulam | Sendamaram |

**Offence** : **Section 294(b), 506(2) IPC and Sec 4 TNPHW Act.**

**Sentence** :**Accused is found not guilty for the offence U/s294(b), 506(2) IPC and Sec 4 TNPHW Act and therefore the accused are acquitted U/s 248(1) of Cr,P.C.,**

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 15:01:30 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026–ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.50/2021
CNR.No.TNTS02-000784-2021

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
சேந்தமரம் கா.நி.கு.எண்.194/2019 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

சிவக்குமார்,
த/பெ.வேல்ராஜன்,
கதவு எண்.2/131,
பிள்ளையார் கோவில் தெரு,
ஆண்டார்குளம் ...எதிரி

இவ்வழக்கு 27.04.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தங்கராஜ் அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இவ்வழக்கில், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>தீர்ப்புரை</u>

### <u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>–

கடந்த 06.06.2019–ம் தேதி 01.00 மணிக்கு சாட்சி–1 வீரசெல்வி அவரது வீட்டு முன்பு பீடி சுற்றிக்கொண்டிருந்தவரிடம் எதிரி அருவாளுடன் அங்கு சென்று சாட்சி–1 ஐ ஒரு பெண் என்றும் பாராமல் ஏய் தேவிடியா உன் புருசனை ஏவி விட்டு என்னிடம் சண்டை போடவிடுகிறாயா உன்னைப்பற்றி எனக்கு தெரியாதா நீ எத்தனை பேர்களுடன் போனாய் என்று நான் சொல்லட்டுமா என்று அசிங்கமாகவும், கேவலமாகவும் பேசியும், 2 முதல் 4 சாட்சிகள் சத்தம் போடவும், எதிரி சாட்சி–1 ஐ பார்த்து ஏ தேவிடியா இவங்க நின்னதால நீ தப்பிச்சிக்கிட்ட என்னைக்கானாலும் இந்த அருவாளால் உன்னை வெட்டி கொல்லாமல்

விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(2) மற்றும் Sec 4 of TNPHW Act–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது சேந்தமரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி இதச பிரிவுகள் 294(பி), 506(2) மற்றும் Sec 4 of TNPHW Act–ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தான் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு–</u>**

வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.5 ரவி தனது சாட்சியத்தில், கடந்த 06.06.2019–ம் தேதி 15.00 மணிக்கு மேற்படி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது வீரசெல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.194/2019 இந்திய தண்டனை சட்டம் இதச பிரிவுகள் 294(b), 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு

செய்துள்ளதாகவும், அந்த அ.சா.ஆ.3 முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளதாகவும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 06.06.2019–ம் தேதி 16.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஆதிஸ்வரன் மற்றும் திருமலைமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் வீரசெல்வி, முருகலெட்சுமி, பெரியசாமி, சிவசங்கரபாண்டியன், பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மாசானமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரியை 06.06.2019 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 294(b), 506(2) and 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கை 07.06.2019 ல் தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார்கள். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(2) மற்றும் Sec 4 of

TNPHW Act–ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்–**

எதிரி, அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்து, பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.5 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்–**

அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரான குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு–**

கடந்த 06.06.2019–ம் தேதி 01.00 மணிக்கு சாட்சி–1 வீரசெல்வி அவரது வீட்டு முன்பு பீடி சுற்றிக்கொண்டிருந்தவரிடம் எதிரி அருவாளுடன் அங்கு சென்று சாட்சி–1 ஐ ஒரு பெண் என்றும் பாராமல் ஏய் தேவிடியா உன் புருசனை ஏவி விட்டு என்னிடம் சண்டை போடவிடுகிறாயா உன்னைப்பற்றி எனக்கு தெரியாதா நீ எத்தனை பேர்களுடன் போனாய் என்று நான் சொல்லட்டுமா என்று அசிங்கமாகவும், கேவலமாகவும் பேசியும், 2 முதல் 4 சாட்சிகள் சத்தம் போடவும், எதிரி சாட்சி–1 ஐ பார்த்து ஏ தேவிடியா இவங்க நின்னதால நீ தப்பிச்சிக்கிட்ட என்னைக்கானாலும் இந்த அருவாளால் உன்னை வெட்டி கொல்லாமல்

விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எனவே, போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்று பார்க்கும் போது, இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும் தன் கணவரின் உடன் பிறந்த தம்பி என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், எதிரி தன்னை அசிங்கமாக பேசி, அவமான படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தன் உறவினர் என்றும் அ.சா.1 வீரசெல்வி தனக்கு தெரியும் என்றும், தனது உறவினர் என்றும் வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தன் உறவினர் என்றும் அ.சா.1 வீரசெல்வி தன் மகள் என்றும், அ.சா.2 முருகலெட்சுமியை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.4 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தன் உறவினர் என்றும் அ.சா.1 வீரசெல்வி, அ.சா.2 முருகலெட்சுமி, அ.சா.3

பெரியசாமி தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

15. இந்த வழக்கில், அ.சா.5 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி அ.சா.1–ஐ அசிங்கமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்து, பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தி குற்ற செயல்களில் ஈடுபட்டார்கள் என்றோ அல்லது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. மேற்சொன்ன விவாதம், காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில், எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(2) and 4 of TNPHW Act–ன் கீழுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

17. முடிவில், எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(2) and 4 of TNPHW Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. இவ்வழக்கின், எதிரி 06.06.2019–ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, 11.06.2019–ம் தேதியன்று நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார்.

**19. வழக்குச் சொத்து–**

இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 15:01:40 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

அ.சா.1 வீரசெல்வி
அ.சா.2 முருகலெட்சுமி
அ.சா.3 பெரியசாமி
அ.சா.4 சிவசங்கரபாண்டியன்
அ.சா.5 திரு.ரவி, (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**
**Judicial Form No.68**

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனுவில் உள்ள அ.சா.1–ன் கையொப்பம் | 12.08.2025 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் மனு | 12.01.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 12.01.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 12.01.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 12.01.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 15:01:46 +0530

நீதித்துறை நடுவர்,

தென்காசி.

**<u>குறிப்பு</u> :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.